தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்க வேண்டும்!

நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, மார்ச் 21 -

தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொகுதி மறுவரையறை குறித்து நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் தொடர்ந்து நோட்டீஸ் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதற்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை தலைவர் ஜகதீப் தன்கரும் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதற்கு தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகள் கடும்எதிர்ப்புதெரிவித்துள்ளன. இந்நிலையில், தொகுதி மறு வரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா மற்றும் தயாநிதி மாறன் உள்ளிட்ட தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, நீதி வேண்டும் என்று முழக்கங்களை எழுப்பினர்.

பஞ்சாப், கேரள மாநிலங்களின் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2025) முகாம் அலுவலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வரி விதிப்பு மற்றும் நிதி குழுத் தலைவர் திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் ஆகியோர் சந்தித்து, 2025-26ஆம் நிதியாண்டிற்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை மாமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதையொட்டி வாழ்த்துப் பெற்றனர்.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில்

எத்தனால் தயாரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை!

பேரவையில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, மார்ச் 21 -

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் தயாரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை என பேரவையில் வினா-விடை நேரத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

அதன் விபரம் வருமாறு:

அமைச்சர் இரா.இராஜேந்திரன்: மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மரவள்ளிக் கிழங்கு மற்றும் அரிசியிலிருந்து எத்தனால் தயாரிக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த மோகனூர் வட்டத்தில் அமைந்துள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2006-2011 ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது, துணை முதலமைச்சராக இருந்த, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழில்துறை அமைச்சராக பொறுப்பேற்று, அந்தநேரத்தில் எத்தனால் ஆலை அமைப்பதற்கு ஆணை

பிறப்பித்து, அது நிறுவப்பட்டது. இந்த எத்தனால் ஆலையிலே கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் மக்காச்சோளம், அரிசி மற்றும் மரவள்ளி கிழங்குமூலம் எத்தனால் தயாரிக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு எத்தனால் தயாரிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கு தனியாக இயந்திரங்கள் அமைக்க வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள், நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, எத்தனால் உற்பத்தி ஆலையினை மேம்படுத்துவதற்காக சுமார் ரூபாய் 6 கோடியே 67 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியினை மேற்கொள்வதற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். அதனடிப்படையிலே அந்த ஆலையை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, மரவள்ளிக் கிழங்கு, அரிசி இவற்றிலிருந்து எத்தனால் தயாரிப்பதற்கு தனியாக இயந்திரத்தை அமைக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அதற்கான வாய்ப்பில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரிக்க இந்த ஆலையிலே வாய்ப்பிருக்கிறது.

சர்க்கரை கழிவுப் பாகிலிருந்து, Molasses-லிருந்து Rectified spirit என்கிற எரிசாராயம் தயாரிக்கப்படுகிறது. இந்த எரிசாராயத்திலிருந்து எத்தனால் அல்லது Enriched Neutral Alcohol தயாரிக்கப்படுகிறது. இதிலே முழுக்க கரும்பிலிருந்து நேரடியாக எத்தனால் தயாரிக்க வேண்டுமென்றால், கரும்பு உற்பத்தியிலிருந்து சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படுகின்ற ஒரு நிலை ஏற்படும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் உற்பத்தியாகிற சர்க்கரையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கி, அவற்றையெல்லாம் நியாயவிலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்குகின்ற நிலை இருக்கிறது. கரும்பு உற்பத்தி பரப்பு அதிகமாகிற போது, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, எதிர்காலத்தில் பரிசீலிக்க வாய்ப்பிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

திருவாரூர் தென்னவராயநல்லூர் நடுநிலைப் பள்ளியில் சத்துணவு சாப்பிட்டு வாந்தி ஏற்பட்ட

மாணவர்கள் நான்கு பேரும் சிகிச்சை அளிக்கப்பட்டு நலமுடன் இல்லம் திரும்பினர்!

பேரவையில் - பூண்டி கே.கலைவாணன் - உறுப்பினர்களின் கவன ஈர்ப்பில் அமைச்சர் கீதா ஜீவன் பதில்!

சென்னை, மார்ச் 21-

பூண்டி கே.கலைவாணன்: திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய, திருவாரூர் ஒன்றியப் பகுதியைச் சார்ந்த தென்னவராயநல்லூர் நடுநிலைப் பள்ளியில் நேற்று மதிய உணவு சாப்பிட்ட பின்பு சில மாணவர்களுக்கு ஒவ்வாமை காரணமாக வாந்தி ஏற்பட்டது. அந்த இளம் சிறார்களை- ஜோசிகா, d/o மணிவண்ணன், வயது 12, ஏழாம் வகுப்பு மாணவி மற்றும் தன்ஷிகா, d/o ரமேஷ் குமார், வயது 13, எட்டாம் வகுப்பு 4 குழந்தைகளுக்குத் தான் வாந்தி வந்தது. ஆனால், மற்ற குழந்தைகளுக்கு பீதி இருக்கக் கூடாது என்பதற்காக அனைத்து மாணவர்களையும் அழைத்துச் சென்று அனைத்து மாணவர்களுக்கும் medical checkup செய்யப்பட்டது. அவர்களுடைய பெற்றோர்கள் வந்து discharge செய்ய வேண்டுமென்று கேட்டபிறகு discharge செய்யப்பட்டார்கள்.

இருப்பினும் ஒரு மாணவர் தொடர் சிகிச்சையில் இருந்துவருகிறார் என்று அரசினர் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதே பிரச்சினை குறித்தும் அ.தி.மு.க. உறுப்பினர்களும் கவன ஈர்ப்பு கொடுத்து இருந்தனர்.

இதற்கு அமைச்சர் கீதா ஜீவன் அளித்த பதில் வருமாறு:-

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருநெய்ப்பேர் ஊராட்சியின், தென்னவராயநல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 18-3-2025 அன்று பள்ளியில் 64 மாணவ, மாணவியர்கள் சத்துணவு உட்கொண்டதில் 4 மாணவர்களுக்கு பிற்பகல் 3-30 மணியளவில் வாந்தி அறிகுறிகள் ஏற்பட்டு, திருவாரூர் அரசு மருத்துவமனையில் முதலுதவிக்காக சேர்க்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மாலை 6-30 மணியளவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக அந்தப் பள்ளியைச் சார்ந்த 35 மாணவ, மாணவியர்களை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, முதலுதவி செய்யப்பட்டு, அந்த 39 மாணவ, மாணவியர்களில் 35 மாணவ, மாணவியர்கள் அன்றே 8 மணியளவில் நல்ல முறையில் அவரவர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய நேர்முக உதவியாளர்(சத்துணவு), மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் நேரில் சென்று விசாரணை செய்து இந்த மாணவர்கள் ஒவ்வொருவரையும் நேரில் சென்று விசாரித்து உரிய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மீதமுள்ள 4 மாணவர்களும் ஏற்கெனவே இரண்டு நாட்களாக உடல்நலக் குறைவில் இருந்தவர்கள் என்பதை நான் இங்கு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இவர்கள் 4 பேரும் இன்று (19-3-2025) காலை நலமுடன் அரசு மருத்துவமனையிலிருந்து, நல்ல முறையில் அவரவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர் என்ற விவரத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 4 நபர்களில் 7 ஆம் வகுப்பைச் சார்ந்த ஜோசிகா, வருனேஷ், 8 ஆம் வகுப்பைச் சார்ந்த தன்ஷிகா மற்றும் ஹரிஹரசுதன்.

ஹரிஹரசுதன் இதய பாதிப்புள்ளவர். அதனால் அவருக்கு முதலுதவி செய்து தொடர்ச்சியாக சிகிச்சை அளித்து வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் பதிலளித்தார்.

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று மாபெரும் பொதுக்கூட்டம்!

மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கை!

நாமக்கல், மார்ச் 21 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி பாண்டமங்கலத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இது குறித்து நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதி பாண்டமங்கலத்தில் இந்தித் திணிப்பு நிதிபகிர்வில் பாரபட்சம் தொகுதி சீரமைப்பில் அநீதி செய்யும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (21.03.2025 - வெள்ளிக் கிழமை), மாலை 6.00 மணி அளவில் பாண்டமங்கலம்.

கடைவீதியில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் பாண்டமங்கலம் பேரூர் கழகச் செயலாளர் பெருமாள் (எ) பி.முருகவேல் தலைமை தாங்குகிறார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். பாலாஜி வரவேற்புரையாற்றுகிறார்.

கபிலர்மலை ஒன்றிய கழகச் செயலாளர் கே.கே. சண்முகம், பாண்டமங்கலம் பேரூராட்சி தலைவர் வி.எஸ்.எஸ்.சோமசேகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பா.நவலடி ராஜா, பூக்கடை டி.சுந்தர், கதிரவன் சேகர், ஜி.ஜெகதீஸ்குமார், சி.கார்த்திகேயன், க.முரளி, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.அருண்குமார், தகவல் தொழில் நுட்ப அணி எஸ்.லோகேஷ் வரன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் வி.மகாமுனி, எ.கந்தசாமி, பி.சந்தோஷ், பி.மஞ்சுளா, கே.செந்தில்குமார், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் எம்.முருகானந்தம், டி.கௌதம், கே.யுவராஜ் (எ) சீனி, எ.கரிகாலன் எஸ்.பிரவீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில்.சம்பத், தலைமைக் கழக இளம் பேச்சாளர் பாவை.பூர்ணிமா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எஸ்.உமாராணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

கூட்டத்தில் ஒன்றியக் கழக செயலாளர்கள் பி.பி. தனராசு, சண்முகம், எம்.தங்கவேல், வேறொரு கழகச் செயலாளர்கள் பி.முருகன், R.கருணாநிதி M.ரமேஷ்பபு, M.ராமலிங்கம், பரமத்தி பேரூராட்சி மன்ற தலைவர்கள் P.மணி, லட்சுமி மூர்த்தி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இறுதியாக மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் R.சீனிராஜன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

கெங்கவல்லி, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், மார்ச் 21-

சேலம் கிழக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட 081 - கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி, மற்றும் 082 - ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான பாகமுகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்

கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள் (BLA2), மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மட்டும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தேதி மற்றும் நேரம் - நகர, ஒன்றிய, பேரூர் இடம் விவரம் வருமாறு:-

082 - ஆத்தூர் சட்டமன்ற தொகுதி:

22.03.2025 காலை 10.00 - ஆத்தூர் ஒன்றியம் - அண்ணா கலையரங்கம், ஆத்தூர்.

22.03.2025 மதியம் 12.00 - ஆத்தூர் நகரம், நரசிங்கபுரம் நகரம், துளுவ வேளாளர் மண்டபம், ஆத்தூர்.

22.03.2025 மாலை 3.00 - ஒருங்கிணைந்த பெ.நா.பாளையம் ஒன்றியம் - கண்ணைய ஆசாரி திருமண மண்டபம், ஏத்தாப்பூர்.

081 - கெங்கவல்லி சட்டமன்ற தொகுதி

24.3.2025 காலை 10.00 - ஒருங்கிணைந்த தலைவாசல் ஒன்றியம் - கொங்கு வேளாளர் திருமண மண்டபம், தலைவாசல்

24.3.2025 மதியம் 12.00 கெங்கவல்லி ஒன்றியம் - ரெட்டியார் திருமண மண்டபம் கெங்கவல்லி.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நேற்று முன்தினம் (19.3.2025), தலைமைச் செயலகத்தில், 2024-2025 ஆம் ஆண்டின், நெடுஞ்சாலைத்துறை திட்டப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும், 2025-2026 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில் இடம்பெறவேண்டிய கொள்கைகள் தொடர்பாகவும், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கரபாண்டியன், முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசிரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் வரவேற்புரையில் ஒன்றியச் செயலாளர் அடிவள்ளி முரளி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட அவைத் தலைவர், இரா.ஜெயராமகிருஷ்ணன், கே.ஈஸ்வரசாமி எம்.பி., எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா, செல்வி ரா.பிரார்த்தனா ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.